www.tamilarangam.net

LIBERATION TIGERS OF THAMIL EALAM

# தமிழீழத்தில் தர்மயுத்தம்

இயற்கை எனது நண்பன்; வாழ்க்கை எனது
தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி

விடுதலைப் புலிகளின் மனோதிடத்தையும் உறுதியையும் சிங்கள ராணுவத்தால் ஒரு போதும் அழித்து விட முடியாது. நாங்கள் மகத்தான தார்மீக வலிமையும், தியாக உணர்வும் உன்னதமான லட்சியப் பற்றும் கொண்டவர்கள்.

வே. பிரபாகரன் (Sunday 11 3 84

"சிங்கள அரச பயங்கரவாத அதர்மத்திற்கு எதிராக எமது தர்ம யுத்தம் விரைவில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. சிங்கள இராணுவ இயந்திரத்தை முடிக்க எமது கெரில்லாப் போராளிகள் தயாராகி வருகின்றனர். எமது தாயகத்தை ஆக்கிரமித்து, எதுமறியாத எமது மக்களை கொன்றுகுவித்து வெறியாட்டம் நடத்திவரும் சிங்களக் கூலிப்பட்டாளத்திற்குத் தகுந்த பதிலடிகள் கொடுக்கப்படும். கோழைகளான இந்த ஏவற்படைகளை எமது தாய் மண்ணிலிருந்து விரட்டியடித்து தேசிய விடுதலையை நாம் வென்றெடுப்போம் என்பது உறுதி. தேசிய சுதந்திரப் போரை வெற்றிப்பாதையில் முன்னெடுத்துச் செல்லவும், யுத்த காலத்தில் பொதுமக்களுக்குத் தகுந்த பாதுகாப்பை அளிக்கவும் எமது விடுதலை இயக்கம் ஒரு பாரிய தேசிய பாதுகாப்புத் திட்டத்தை வகுத்திருக்கிறது. இத்திட்டத்தைச் செம்மையாகச் செயற்படுத்த 'தமிழீழத் தேசிய பாதுகாப்பு நிதி' ஒன்றை ஆரம்பித்திருக்கிறோம். இதற்குத் தமிழீழத்திலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் தம்மாலான உதவியையும் ஒத்துழைப்பையும் அளிப்பது அத்தியாவசியமானதாகும்."

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் தமிழீழ மக்களுக்கு விடுத்த அறிக்கையில்

---

"சிங்கள அரசபடைகளுக்கு எதிரான கொரில்லாத் தாக்குதல்களில் எப்போதுமே முன்னணியில் நின்று கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களின் கொரில்லா யுத்தத்தைத் துரிதப்படுத்துவதில் இப்போது முனைந்து நிற்கின்றனர் என்பதை இன்றைய நிலைமைகள் சுட்டிக்காட்டுகின்றன" —அனிதா பிரதாப் (Sunday, 15-21 APRIL 1984)

"கடந்த ஆண்டில் ஸ்ரீலங்கா இராணுவ டிரக் வண்டியின் மீது கொரில்லாத் தாக்குதல் நடத்தி பதின்மூன்று பேரைக் கொன்றதும், அண்மையில் விமானப்படை வீரர்கள் இருவரைக் கொன்றதும் அரசபடைகளுக்கு எதிராகத் தீர்க்கமான போராட்டத்தை நடத்தும் நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளனர் என்பதையே உறுதி செய்கிறது" (THE WEEK, May 6-12, 1984)

"விடுதலை இயக்கங்களில் அதிதீவிரமான போராளிகளைக் கொண்ட இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமாகும்.

ஏனைய குழுக்கள் எல்லாம் இந்தியாவிலேயே பயிற்சித் தளங்களைக் கொண்டிருக்கும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே இலங்கை மண்ணில் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு இயக்கமாகும்." —சேகர் [illegible]

India Today, 31st March

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்